# மணிமேகலை காட்டும் பௌத்த மெய்யியல் அறக்கோட்பாடு

முனைவர் வே.கண்ணதாசன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்,
எஸ்.ஆர.எம்.அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்.
vlkannadasan@gmail.com

52

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சமூக இயங்கியலில் சமண பௌத்த சமயங்களின் செயல்பாடும் செல்வாக்கும் பண்டுதொட்டே பரவலாக்கம் பெற்றிருந்த வரலாற்றைக் காண்கிறோம். வாழ்வியல் நடைமுறைகளின் முகிழ்ப்பாக இலக்கியப் படைப்பாக்கங்கள் தோற்றம் கொள்ளும் நிலையுணர்ந்து அவற்றுக்கான ஒழுங்கியலைக் கட்டமைக்கும் சூழலை அச்சமயங்கள் தமக்குரியனவாகத் தகவமைத்துக் கொண்டன. இலக்கியக் கோட்பாடுகளை வகுத்து இலக்கண நூல்களாகவும் வாழ்வியல் கோட்பாடுகளை வகுத்து அறநூல்கள் ஆகவும் ஆக்கித் தந்த பின்னணியில் சமண பௌத்த சமயங்கள் தொழிற்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய நெடும் பரப்பில் அற இலக்கியங்களைத் தொடர்ந்து உருவான காப்பியங்களின் தோற்றப் பின்னணியிலும் இச்சமயங்களின் செல்வாக்கு மிக்கிருப்பதையும் காப்பியக் கதையாக்கங்கள் மற்றும் பாத்திர வார்ப்புகளின் வழி அறக் கோட்பாடுகள் மேலிட்டு வாழ்வியல் நடைமுறைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க முயன்றிருப்பதையும் காணவியலும். அவ்வகையில் சீத்தலைச் சாத்தனாரால் படைப்பாக்கம் பெற்றுள்ள மணிமேகலைக் காப்பியத்தில பௌத்த அறப்போதனைகளாக மெய்யியல் அறங்களாகக் காட்டப்படும் கருத்துகளைத் தொகுத்து ஆய்வது அக்காலச் சமூகக் கட்டமைப்பை வடிவமைப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் பௌத்த சமயம் கொண்டிருந்த ஈடுபாட்டை இனம்காண வகை செய்யும்.

**திறவுச் சொற்கள்**

தமிழ்ச்சமூக இயங்கியல்- சமண பௌத்த சமயங்கள்-இலக்கியம் இலக்கணம் கல்விப் பயில்வு- சமூக ஒழுங்கியல்-அறப்போதனைகள்- மெய்யியல் அறங்கள்-பசிப்பிணி மருத்துவம் -இம்மை மறுமைக் கொள்கை

**முன்னுரை**

சங்ககாலத் தமிழர் வாழ்வியல், அகம், புறம் என்னும் திணைக் கோட்பாட்டு வாழ்வியலாகக் வகுத்தளிக்கப் பட்டிருப்பதையும் அவ்வாழ்வியல் தகவமைப்பையும் தரவுகளையும் உள்ளீடாகக் கொண்டே இலக்கிய ஆக்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன என்றும் கருதலாம். அகக்காதலையும் புறவீரத்தையும் கவிதைப் பொருண்மையாகளாகக் கொண்டு தேர்ந்த திணைநிலையமைப்பில் அவை கட்டமைக்கப் பட்டிருத்தலே பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த பாடல்களைத் தொகையாக்கம் செய்ய வழிவகை செய்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அகம் மற்றும் புறத்திணை சார்ந்த

வாழ்வியல் செம்மைக்கான அறநெறிக் கோட்பாடுகளைத் தன்னியல்பாய்த் தமிழ்ச் சமூகம் உருவாக்கிக் கொண்டிருந்த அக்காலத்தில் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு வாக்கில்) சமணமும் பௌத்தமும் அப்பணியில் மிகுந்த ஈடுபாட்டுடன் தொழிற்பட்டிருந்த வரலாற்றைக் காண்கிறோம். அதனால்தான் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோற்றம் பெற்ற இலக்கிய ஆக்கங்களில் பெரும்பாலானவை சமண பௌத்த மெய்யியல் சார்ந்த அறங்களை மையமாகக் கொண்டு தோன்றியுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகத் தொகுமரபிற்கு உட்பட்டுள்ள நூல்களில் முந்தைய திணை நிலை மரபு முறையில் திணைமாலை ஐம்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, கைந்நிலை ஆகிய 6 நூல்கள் அகத்திணை சார்ந்தவையாகவும் களவழி நாற்பது புறத்திணை சார்ந்த்தாகவும் காட்டப்பட மீதமுள்ள 11 நூல்களும் அறநூல்கள் என்னும் நிலையிலேயே அறியப்படுகின்றன. சங்க இலக்க்கியங்களில் அறம் ஒரு கூறாகப் பேசப்பட பின்வந்தவர்கள் அறத்தை மட்டுமே இலக்கிய எடுகோளாகக் கையாண்டிருப்பதற்கான பின்னணியைச் சிந்திக்க வேண்டியுள்ளது.

**“சங்க காலத்தின் அளவுகடந்த சிற்றின்ப நுகர்ச்சி, மதுவுண்ணல், பரத்தையர் ஒழுக்கம், புலால் உண்ணல் போன்றன** எல்லா நாட்டு **வீரயுகங்களிலும் பெருகிக் காட்சி தருகின்றன. இவை தனியுடைமை பெருகிய அறநெறிக் காலத்தில் அதிகமாகக் கண்டிக்கப்படுவதைக் காண்கிறோம். வீரயுகப்போக்கில் மனிதகுலம் கொண்ட வெறுப்பாலும் தனியுடைமைகளின் வளர்ச்சியாலும் தோன்றிய அறநெறிக் காலத்தின் புதிய மனப்போக்கிற்கு இதே மனப்போக்கில் அவ்வந் நாட்டில் தோன்றிய சமயங்களும், புகுந்த சமயங்களும் வலுவூட்டின. தமிழ்நாட்டு அறநெறிப் பாடல்களில் புத்த சமண சமயங்களும், மேல்நாட்டு நீதி இலக்கியங்களில் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களும் பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தின”. (ஜான் சாமுவேல்.,ஜி.1978;26)**

என அறிஞர் ஜான் சாமுவேல் கருதுவதைச் சிந்தித்தால் இவ்விலக்கியங்கலின் தோற்றப்பின்னணி குறித்த தெளிவைப் பெற இயலும். இனக்குழுச்சமூக மனநிலையில் இருந்து வளர்ந்த அரச உருவாக்கமும் உடைமைப் பொருளாதாரமும் சமூகத்தில் உருவாக்கிய தாக்கத்தின் பின்னணியில் இவ்விலக்கியங்களை இனம் காணவேண்டும்.

போர்களாலும் பொருளாதார முரண்களாலும் சிதைந்து கொண்டிருந்த சமூக இயங்கியலைச் செம்மைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே இவ்வறப்போதனை இலக்கியங்களைக் கருத இடமுண்டு. உற்று நோக்கினால் இலக்கிய ஆக்கங்களை ஓர் ஒழுங்கமைவில் கொண்டுவர இலக்கண வரையறைகளை உருவாக்கித் தந்ததுபோல் வாழ்வியல் ஒழுங்கமைவு நோக்கித் தொகுத்தளிக்கப் பட்டவையே அறநூல்கள் எனக் கருதுவதில் பிழையேதும் இல்லை. இத்தகைய அறப் போதனை மரபினை பின்னர் வந்த காப்பியக் கதையாக்கங்ளிலும் காணமுடியும். காப்பியங்களில் திணைப் பின்னணியோடு புலன்கடந்த உலகியல் கட்டமைக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. குறிப்பாகத் தத்தமது கொள்கை அறங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க சமயங்கள் மேற்கொண்ட கதையாக்க முயற்சிகளே காப்பியங்கள் எனக் கருதவும் இடமுண்டு. சிலப்பதிகாரத்தின் கதைத்தொடர்ச்சியாய்

அமைந்த காப்பியமான மணிமேகலை மானுட மேம்பாட்டை வலியுறுத்தும் அறப்போதனைகளின் களஞ்சியமாகவே கருத இடமளிக்கிறது. மணிமேகலைக் காவியத்துள் இடம்பெறும் கிளைக்கதைகள் யாவுமே பௌத்த அறங்களை பொதுத்தளத்தில் எளிய முறையில் கொண்டு சேர்க்க எடுக்கப்பட்ட முயற்சி என்பதை அறிதல் வேண்டும். விளங்கச் சொல்வதெனின் அக்காலச் சமூக இயங்கியலில் மேம்பட்ட சமயமென முன்னிலை பெறுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி எனக் கொள்வதில் தவறேதும் இல்லை. வைதீக சமயப் பின்னணியில் நிலவியிருந்த சடங்கு நம்பிக்கைகள், வேள்விகள், பலிகள் போன்றவற்றை விமர்சிப்பதிலும் அதிலிருந்து வேறுபட்டு மானுட வாழ்வுக்கான வரையறைத் திட்டங்களை உருவாக்குவதிலும் சமண பௌத்த சமயங்கள் ஆர்வம் கொண்டிருந்தன எனக் கொள்ள இடம் தருகின்றன. குறிப்பாக மானுட மேம்பாட்டை வலிமையான முறையில் கட்டமைப்பதான முயற்சிகள் இத்தகைய தர்க்கங்களிலும் தத்துவங்களிலும் இடம் பெற்றிருப்பதை இனம் காணலாம். போர்களாலும் பறச் சூழல்களாலும் சீர்கெட்டுச் சிதைகொடுத்ததுந்து போயிருந்த ஒருசமூகத்தை மறுகட்டமைப்பு செய்வதற்கான செயல்திட்டங்களாகவே அறப்போதனைகளை மேற்கொண்டிருந்த பாங்கு புலனாகிறது. குறிப்பாகப் பரத்தமை ஒழிப்புச் சிந்தனையை முன்வைத்து அக்குலத்தில் இருந்தே சமூகச் சீர்திருத்தப் புரட்சிப் பெண்மணிகளாக மாதவியையும் மணிமேகலையையும் முன் எடுகோளாகக் முக்கியத்துவம் பெறுகிறது.

**பசிப்பிணி மருத்துவம்**

வள்ளுவர் அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை எனக் கட்டமைத்த பார்வையிலிருந்து வளர்ந்து பசித்த வயிறுகளுக்கு உணவளித்துப் பசிப்பிணி போக்குதலே அறம் என பௌத்தம் மணிமேகலையின்வழி கட்டமைக்கிறது. ஆபுத்திரனின் வாழ்வியலாய் வடிவமைக்கப்பட்டுள்ள காதைகள் பசியால் வாடும் ஏழைகளின் வறிய நிலையையும் அக்கொடுமையிலிருந்து விடுவித்தலைத் தன்பிறப்பின் பயனாகக் கருதும் பாங்கினையும் காட்ட வல்லன.

**அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்.**

**(ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை:228-230)**

என எடுத்துக் காட்டுகிறது. மணிபல்லவத் தீவில் கோமுகிப் பொய்கையில் இருந்து அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியைப் பெறுவதாக வரும் காட்சிகளும் அக்காலச் சமூக இயங்கியலில் அதற்கானத் தேவை என்ன என்பதை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

"பசிப்பிணி என்னும் பாவி ! அதுதான் எத்தனை கொடிது. அது கொண்டோரின் குடிப்பிறப்பு அழிக்கும்; நற்பண்புகளைக் கொல்லும்; வாழ்வின் ஆதாரமாக விளங்கும் கல்வி எனும் பற்றுக்கோட்டையும் அகற்றும்; நாணம், மேன்மை எல்லாவற்றையும் சிதைக்கும்; அழகிய ஆபரணம் பூணும் முலைகளுடன் கூடிய மனைவியுடன் இன்னொருவர் வீடில் யாசகத்திற்குச் சென்று நிற்க வைக்கும்; புல்லும் பொசுங்கும் கொடிய பஞ்சத்தில் விசுவாமித்திரன் போன்ற முனிவனையே நாய்க்கறியைத் தின்ன

வைக்கும்;திருப்பிச் செய்யும் சக்தி உடையோர்க்கு அளித்தல் பெரிதன்று. அது அறத்தை விலைபேசுவது.. ஒன்றும் ஆற்ற இயலா மக்களின் அரும்பசியைக் களைவோரே மெய்யான அறவாழ்க்கை வாழ்வோர். இந்த மண்ணுலகில் வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! அத்தகைய உயிர்க்கொடைக்கான உறுதியுடையவளாயினை நீ!" – எனப் பசிப்பிணியின் கொடுமைகளை எடுத்துக் கூறி அதனை நீக்கும் பெருங்கடன் மணிமேகலைக்கு இருப்பதாகவும் அதற்குரிய கருவியாகவே அட்சய பாத்திரம் வழங்கப்படுவதாகவும் மணிமேகலா தெய்வமும் தீவதிலகையும் ஆற்றுப்படுத்துவதாகக் காட்சிகள் அமைகின்றன.

**இம்மை- மறுமைச் சிந்தனை**

சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையானது ஒருவன் தான் செய்த செயல் வினைக்கேற்பவே மறுபிறவியைப் பெறுவான் என்றும் யாரும் அதிலிருந்து தப்ப இயலாது என்றும் பவுத்தக் கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. இதேபோல மணிமேகலாத் தெய்வம் மணிமேகலையின் தோழி சுதமதியிடம் சக்கரவாளக் கோட்டத்தின் தன்மையை விளக்கும்போது நிலையாமைக் கோட்பாடு அழுத்தம் பெறுகிறது. கொலை அறமாம் எனும் கொடுந்தொழில் மாக்கள் அவலப் படிற்றுறை ஆங்கது" எனக் காட்டப்படுவதன் வழி வேள்வி மற்றும் யாகங்களில் உயிர்களைப் பலிகொடுப்பதன் வழி ஒருவன் பிறவியைக் கடப்பதும் புண்ணியம் சேர்த்தல் என்பதும் சாத்தியமில்லை என்பதும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. கள்ளுண்ணாமை, கொல்லாமை முதலான அறங்களை வலியுறுத்திச் செயலுக்கேற்ப நமக்கு சுவர்க்கமோ, நரகமோ கிடைக்கும் எனவும் காட்டுவதும் முக்கியத்துவம் பெறுகிறது. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு (குறள் 339) எனும் வள்ளுவர் கருத்தியலை உள்வாங்கி

**பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்**
**உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்**
**நல்லறஞ் செய்தோர் நல்லுல கடைதலும்**
**அல்லறஞ் செய்தோர் அருநர கடைதலும்**
**உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்.**

**(ஆதிரை பிச்சை இட்ட காதை:84 - 90)**

என இக்கருத்தை முன்வைக்கும் மணிமேகலை இம்மை மறுமை குறித்த தெளிவான புரிதலில் பயணித்திருப்பதை அறிய முடிகிறது.

மணிமேகலையில் வரும் கடவுளர் பாத்திரங்களும், அறவண அடிகளும் சமய நீதி உணர்த்தவே வருகின்றனர். 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதில் சமண, பௌத்த சமயங்கள் ஆழ்ந்த நம்பிக்கை உடையன. இவ்வகையில் பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலையில் வரும் அனைத்துப் பாத்திரங்களின் செயல்களுக்கும் காரணம் 'வினைப்பயனே' என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. அத்துடன இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய நிலையாமைக் கோட்பாடுகளை வற்புறுத்துவதில் இவ்விரு சமயங்களும்

தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வன.

தொல்காப்பியர் காஞ்சி என்பதை நிலையாமை என்னும் பொருள்படக் கூறுவதை,**"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல்.புறத் 23)** என்ற நூற்பாவின் மூலம் உணரலாம். இந்நூற்பாவிற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர், "அறம், பொருள், இன்பம் ஆகிய பொருட்பகுதியானும் அவற்றுள் பகுதியாகிய உயிரும், யாக்கையும், செல்வமும், இளமையும் முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியை உடையது காஞ்சி" (தொல்.புறத் 23. நச்சர் உரை) என்று விளக்கம் தருகிறார். மதுரைக்காஞ்சி நிலையாமையை உணர்த்தும் திணைப்பெயராக வந்துள்ளது என்றும் தெளிவுறுத்துகிறார். வள்ளுவப் பெருந்தகையும் நிலையாமை என்னும் தனித்த ஓர் அதிகாரத்தையே படைத்துக் காட்டியுள்ளார். நிலையாமைக்குரிய இலக்கண விளக்கமாக

**"நில்லாத வற்றை நிலையின் என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை" (குறள் 331)**

என்று வாழ்க்கையின் இழிந்தநிலை சுட்டப்படுகின்றது. எனவேதான் மணிமேகலையும் இளமையும் உடம்பும் நிலையானவை அல்ல; செல்வமும் நிலையானது அல்ல; அறமே நிலைத்தது, என்றும் துணையாக இருப்பது என எடுத்துக்காட்டுகிறது.

**இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை ஆவது. (மணிமேகலை சிறைசெய் காதை: 135 – 138 )**

என இதனைத் தெளிவுபடுத்துகிறது .உதயகுமரன், மணிமேகலையின் திறம் குறித்து சுதமதியிடம் வினவுகின்றான். அப்போது அவள் யாக்கையின் நிலையாமையைக் கூறுகின்றாள்,

**"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது**
**புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது**
**மூத்துவிளி வுடையது தீப்பிணி இருக்கை**
**பற்றின் பற்றிடங் குற்றங் கொள்கலம்**
**புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை**
**அவலக் கவலை கையா றழுங்கல்**
**தவலா உள்ளந் தன்பா லுடையது**
**மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து" (மணி 4 123-130)**

என என்றோ ஒருநாள் அழியக்கூடிய இவ்வுடலின் நிலையில்லாத் தன்மையைச் சுதமதியின் வழிச் சாத்தனார் எடுத்துக் காட்டுகின்றார்

**பிறவிப் பெருந்துயர்**

வள்ளுவர் பிறவித் துயரின் தன்மை யறிந்தே பெருங்கடலுடன் ஒப்பிடுகிறார். பிறவி, துன்பம்

மிகுந்தது என்பதையும் அத்துன்பத்தை அடையாமலிருக்கப் பிறவாமை எய்தவேண்டும் என்பதையும் மணிமேகலையின் பாத்திரப்படைப்பின் வழி சாத்தனார் விளக்க முயல்வதை வள்ளுவரின் கருத்துடன் பொருத்தி ஆராயலாம். **பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும் பேரின்பம் (ஊர் அலர் உரைத்த காதை: 64 - 65**) எனச் சாத்தனார் பிறவிப் பெருந்துயரைக் காட்டுவார்.

முற்பிறப்பில் மணிமேகலையின் தமக்கைகளாக இருந்தவர்கள் இப்பிறப்பில் மணிமேகலையின் தாய் மாதவியாகவும், தோழி சுதமதியாகவும் பிறந்துள்ளனர் (9, 10 காதைகள்). முற்பிறப்பில் இலக்குமியாக இருந்த பெண் மணிமேகலையாகப் பிறந்துள்ளாள். இலக்குமியின் கணவனாக இருந்த இராகுலன் இப்பிறவியில் மணிமேகலையைத் தொடர்ந்து செல்லும் உதயகுமரனாகப் பிறந்துள்ளான். சென்ற பிறவியில் இலக்குமியாக இருந்தவள் சாதுசக்கர முனிவர்க்கு உணவளித்ததால் இப்பிறவியில் தவச்செல்வியான மணிமேகலையாகப் பிறந்துள்ளாள். அத்துடன் அமுதசுரபிகொண்டு பசியால் தவிப்பவர்களின் பசிப்பிணியைப்போக்கும் புண்ணியத்திற்கு உரியவளாகிறாள். அமுதசுரபியை முதலில் பெற்ற ஆபுத்திரன் ஏழை, எளிய மக்களின் பசியைத் தீர்த்த நல்வினையின் பயனால் புண்ணியராசனாகப் பிறந்துள்ளான் என ஒவ்வொரு பாத்திரத்தின் முற்பிறவி பற்றிய புரிதலையும் அப்பிறவியில் செய்த நல்வினையின் வாயிலாக இப்பிறவியில் அடைந்துள்ள பேறு குறித்தும் எடுத்துக் காட்டுவது கதையாக்கத்தின் ஊடே பௌத்த தத்துவங்களைப் பரப்பும் முயற்சி எனக் கொள்ளலாம்.

உதயகுமரனின் சாவினால் மனம் நொந்து வருந்தும் தாயிடம் மணிமேகலை, மரணத்திற்காக வருந்த வேண்டிய தேவை இல்லை என ஆறுதல் கூறி, உயிர் என்பது பிறவி தோறும் வெவ்வேறு உருவங்களை ஏற்கும் தன்மையுடையது ஆதலால் எவ்வுயிரையும் நேயத்துடன் அணுக வேண்டும் எனும் கருத்தை முன்மொழிவாள்.

**உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ**
**உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை**
**எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரோ**
**உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்**
**செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்வு அரியது**
**அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி**
**எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும். (சிறைவிடு காதை, 73 - 79) என** இதனைச் சாத்தனார் காட்சிப் படுத்துவார். மாதவி துறவறம் மேற்கொள அறவண அடிகளைத் தொழுகிறாள். அவளுக்குச் சமய நீதி உணர்த்தும் அடிகள், பௌத்த சமய அறவியலை மேலிட்டு,

**பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;**
**பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்;**
**பற்றின் வருவது முன்னது; பின்னது**
**அற்றோர் உறுவது; அறிகஎன்று அருளி,**
**ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி,**

**உய்வகை இவைகொள (ஊர் அலர் உரைத்த காதை: 64-69)** எனக்காட்டுவது இவ்விடம் நோக்கற்பாலது. ஏனெனில் அக்காலச் சமூகத்தைப் பீடித்த கள், காமம், கொலை, பொய், களவு என்னும் ஐந்தினையும் முற்றும் துறத்தலாகிய மார்க்கத்தைக் காட்டியதாகக் கொள்ளலாம்.

**முடிவுரை**

பௌத்த சமயம் , மணிமேகலை காப்பியக் கதையாக்கத்தின்வழி அக்காலச் சமூக மானுட மேம்பாட்டிற்கும் வாழ்வியல் ஒழுங்கமைவிற்குமான விதிகளையும் வரையறைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்க முயன்றிருப்பதைக் காண்கிறோம். பசி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு,மது ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு, கொலை களவு ஒழிப்பு எனப் பல சீர்திருத்தங்களை மணிமேகலைக் காப்பியம் எடுத்தியம்புகிறது.. அமுத சுரபி என்ற பாத்திரக் கற்பனை பசியொழிப்பிற்காகவே உருவாக்கப்பட்டிருப்பதைக் கருதினால் பௌத்தம் அக்காலத்தில் பசிப்பிணி போக்குதலில் கவ்னம் செலுத்தியுள்ளதைக் காட்டவியலும். பிறப்பால் பெருமையில்லை, செய்கையால்தான் பெருமையுண்டு என நிறுவுவதுடன் பிற சமயங்களின் கொள்கைகளையும் எடுத்துக்காட்டிப் புத்தசமயக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்திருப்பது இலக்கியத்தைக் கொள்கை பரப்பும் கருவியாக ஆக்கியிருக்கும் முக்கியமான மாற்றத்தை உணர்த்துகிறது. ஊன்துவை அடிசில் உண்டு பழங்கள்ளை மாறிமாறி அரசனும் குடிகளும் மாந்துவதைப் பெருமையாக விதந்து பேசும் சங்க இலக்கியத்தடம் மாறிப் புலால் மறுத்தலையும் கள்ளுண்ணாமையையும் மணிமேகலை வற்புறுத்துவது குறிப்பிடத்தக்க மாற்றமெனலாம். சமூகம் அத்தகைய மாற்றத்தை எதிர்நோக்கியது மணிமேகலையின் வழி அத்தகைய அறங்களை பௌத்தம் போதித்தது என நிறுவலாம்.

**பயன் பயந்த நூல்கள்**

1. வேங்கடசாமி., மயிலை.சீனி, பௌத்தமும் தமிழும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, 2007.

2. வேலுப்பிள்ளை.,ஆ. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை -5, 1985.

3. ஜெயபாலன்.,க. பௌத்தத் தமிழ் இலக்கிய வரலாறு (20ஆம் நூற்றாண்டு), தமிழ்நாடு பௌத்த சங்கம், சென்னை -40, 2014.